நாள்: 25.11.2025
OS193/2022
பெயர் பரமராஜ்
வா.சா.2

**குறுக்கு விசாரணை**

இது வரை நான் எத்தனை வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன். நான் பொதுவாக வாதிக்கு ஆதரவாகவே சாட்சியம் அளிப்பவன் என்றால் சரியல்ல. உண்மையை சொல்லுவேன். நான் புரோநோட்டு எழுதுவதற்கு முன்னர் ஒரு நகல் தயார் செய்து அதில் திருத்தங்கள் செய்து தான் அசல் நோட்டை எழுதுவது வழக்கம் என்றால் சரியல்ல. என் அனுபவத்தில் அடிப்படையில் நேரடியாகவே எழுதுவேன். புரோநோட்டை எழுதும் போது அந்த சமயம் யார் யார் இருந்தார்கள் என்றால் யாசித் அகமது, யாகூப் ஹசன், 2ம் பிரதிவாதியின் மனைவி நஸ்ரின், நஸ்ரின் முதல் சாட்சியாக கையொப்பம் போட்டார். அய்யனார் 2ம் சாட்சியாக கையொப்பம் போட்டார். பிரதிவாதிகளை நான் புரோநோட்டு எழுதுவதற்கு முன்பு பார்த்ததில்லை என்றால் சரியல்ல அவர்கள் மீன் கடை வைத்திருந்தனர் நான் மீன் வாங்கும் போது பழக்கம். மீன் கடை வைத்திருந்த விவரமே வாதி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2 புரோநோட்டுகளையும் வாதி வீட்டில் வைத்து தான் எழுதினேன். நஸ்ரின், அய்யனார் தான் 2 நோட்டுக்களுக்கும் சாட்சி கையெழுத்து போட்டனர். 04.03.2021 ல் 8 லட்சத்திற்கு ஒரு புரோ நோட்டும், 11.03.2021ல் 8 லட்சத்திற்கு ஒரு புரோநோட்டும் எழுதினேன். 2 புரோநோட்டுகளிலும், மியான்கான் தெரு என்ற இடத்தில் திருத்தங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த திருத்தல்கள் அந்தந்த தேதிகளில் சரிசெய்து வரி பிளப்பு என எழுதி நான் கொயொப்பம் செய்துள்ளேன். 2 நோட்டுகளிலும் ஒரே தேதியில் எழுதியதால் தான் ஒரே வார்த்தையில் தவறுகள் வந்துள்ளது என்றால் சரியல்ல. நிரப்பபடாத புரோ நோட்டுகளை ஒரே நேரத்தில் நான் எழுதியதால் தான் தவறு வந்துள்ளது என்றும் வெவ்வேறு தேதியில் எழுதியிருந்தால் முதல் புரோ நோட்டில் தவறை சரிசெய்த பின்னர் 2வது புரோநோட்டில் தவறு ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அந்த தவறை சரி செய்யும் போது உபய வாதிகளும் உடன் இருந்தனர். பிரதிவாதிகள் இருந்திருந்தால் நான் சரியாக எழுதியிருப்பேன் என்றும் பிரதிவாதிகள் புரோநோட்டு தேதியில் இல்லாமல் வெத்து புரோநோட்டை நான் பூர்த்தி செய்யும் போது தான் பிழை ஏற்பட்டது

என்றால் சரியல்ல. உபயவாதிகளும் திருத்தங்களை ஒப்புக்கொண்டனர். திருத்தங்களை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டனர் என நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பதிவு செய்யப்பட்ட ஆவண எழுத்தர் கிடையாது அனுபவ ரீதியில் ஆவணம் எழுதுவேன். நான் எழுதும் போது பாக்கெட் காலண்டர் வைத்து எழுதுவேன். அப்பொழுது நான் தமிழ் ஆங்கில தேதிகளை நோட்டில் எழுதுவது வழக்கம் என்றால் சரியல்ல சில சமயங்களில் எழுதுவேன். சில சமயங்களில் எழுதமாட்டேன். புரோநோட்டுகளை எழுதிய தமிழ் தேதி தெரியாத காரத்தினால் தான் வெத்து புரோநோட்டை எழுதிய காரணத்தினால் தான் ஆங்கில தேதியை போட்டு வாதிக்கு ஆதரவாக புரோநோட்டு எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 புரோநோட்டுகளையும் வெவ்வேறு தேதியில் எழுதப்பட்டுள்ள நிலையில் ஒரே சாட்சிகள் 2 நோட்டிலும் சாட்சியாக இருக்க வாய்ப்பில்லை என்றும் நான் ஒரே தேதியில் தான் வெற்று புரோநோட்டை பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை என்னால் அடையாளம் காட்ட இயலும். 1ம் பிரதிவாதி யாகூப் ஹசன் கையொப்பம் வாதியால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் புரோநோட்டை எழுதியதால் என்னை சாட்சியம் அளிக்க கூப்பிட்டனர். நான் பல நபர்களுக்கு வெத்து புரோநோட்டை எழுதி கொடுத்து சாட்சியம் அளிக்கும் பழக்கம் உடையவர் என்றும் அதனால் என் சாட்சியம் நம்பதகுந்த சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.